# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.156/2025</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாஸ்கர் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>**:

விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும் அப்போது சம்பவஇடத்தில் இல்லையென்று சொன்னால் சரியல்ல. நான் காயமடைந்தவரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை. இறந்துபோனவரும் நானும் பக்கத்து ஊர்க்காரர். இறந்துபோனவர் பக்கத்து ஊர்க்காரர் என்பதால் பார்க்காத சம்பவத்தை பார்த்தாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் கனரக வாகனமாகும். கனரக வாகனம் வருவதை கவனிக்காமல் இறந்துபோனவர் தான் ரோட்டின் வலதுபக்கம் திரும்பி விபத்தை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்துபோனவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் பார்க்காத விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.